செ.வெ.எண்:180 நாள்:17.03.2018

**கை,கால் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறையுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய திரைப்படவளர்ச்சி கழகம் மூலம் பல்லூடக பயிற்சி இலவசமாக வழங்கப்படவுள்ளது. விண்ணப்பங்கள் வரவேற்கபடுகின்றன. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் தகவல்:**

கை, கால் பாதிக்கப்பட்ட, செவிதிதிறன் குறையுடைய மற்றும் மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கு பல்லூடகப் பயிற்சி மற்றும் இலக்கப் புகைப்பட பயிற்சியை தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் மூலம் சென்னையில் 1 மாத காலம் இலவசமாக உணவு விடுதியுடன் கீழ்காணும் 6 பயிற்சிகளை அளிக்கப்பட்டு வருகிறது.

1.FCV-டிஜிட்டல் நான் (லீனியர்) எடிட்டிங்-DNLE

2. AVID-டிஜிட்டல் நான் (லீனியர்) எடிட்டிங்-DNLE

3. பல்லூடக பயிற்சி-Multimedia Training

4. இலக்க புகைப்பட பயிற்சி-Digital Still Photography

5.ஆடியோ இன்ஜினியரிங்

6. அனிமேசன்

மேற்கண்ட பயிற்சி மாற்றுத்திறனாளிகளுக்கு நல்ல வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி, வாழ்க்கையில் முன்னேற்றம் அளிக்கும் வகையில் இருப்பதால் திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று 18 வயது முதல் 40வயது வரையுள்ள கை, கால் பாதிக்கப்பட்ட,(40-60 சதவிதம் உள்ளவர்கள்) செவித்திறன் குறையுடைய மற்றும் மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள் இவ்வறிய வாய்ப்பினை பயன்படுத்தி பயிற்சியில் சேர்ந்து பயன்பெறுமாறும், பயிற்சியில் சேர விரும்புவோர் மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவகம், கொக்கிரகுளம், திருநெல்வேலி தொலைபேசி எண்:0462-2500157 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு **திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள்** தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி